ISSN: 2582–5518

புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351









## மணிப்பூர் வீடியோ வழக்கை சிபிஐ விசாரிக்க பாதிக்கப்பட்ட பெண்கள்

# எதிர்ப்பு

## சுதந்திரமான ஓர் அமைப்பை உச்ச நீதிமன்றம் உருவாக்க வேண்டும்: வழக்கறிஞர் கபில் சிபல்

## மாநில அரசு பாதிக்கப்பட்ட பெண்களுக்கான மறுவாழ்வு நடவடிக்கைகளை வகுத்துள்ளது; மத்திய அரசு



புதுடெல்லி, ஆக. 1-

மணிப்பூர் சம்பவம் தொடர்பான வீடியோவில் இரண்டு பெண்கள் ஆடையின்றி ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டது, பெண்களுக்கு எதிராக அக்கலவரம் தொடர்பாக நடந்த 'தனிப்பட்ட சம்பவம் இல்லை' என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

கடந்த மே மாதம் மணிப்பூர் மாநிலத்தில் தொடங்கிய இனக்கலவரத்தின்போது பழங்குடியினப்பெண்கள் இருவர் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டு ஆடையின்றி ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பெண்கள் தங்களின் அடையாளம் வெளியிடப்படக்கூடாது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளுடன் உச்ச நீதிமன்றத்தில் புதிதாக மனுத் தாக்கல் செய்திருந்தனர். இந்த மனுவை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட்நேற்று விசாரணை செய்தார். அப்போது அவர், "மே 4-ம் தேதி நடந்த இந்தச் சம்பவம், ஒரு தனிப்பட்ட சம்பவம் இல்லை என்பது உள்துறைச் செயலாளர் தாக்கல் செய்த பிரமாணப் பத்திரத்தில் இருந்து தெரிகிறது.

பாதிக்கப்பட்ட இந்த இரண்டு பெண்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று இந்த நீதிமன்றம் எந்த அளவுக்கு விருப்புகிறதோ அதே அளவுக்கு இதுபோல பாதிக்கப்படும் பிற பெண்களுக்கும் நீதி கிடைக்கும் வகையில் ஒரு வழிமுறையை (mechanism) உருவாக்க வேண்டும். குற்றம் தொடர்பாக வழக்கு போடுதல், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தலைஉறுதிசெய்யும் ஒரு செயல்முறையை உருவாக்க வேண்டும்" என்று தெரிவித்தார்.

விசாரணையின் போது பாதிக்கப்பட்ட பெண்களின் சார்பாக ஆஜரான மூத்த வழக்கறிஞர் கபில் சிபல், மணிப்பூர் வழக்கு விசாரணை சிபிஐக்கு மாற்றப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார். மேலும்,மே 4 சம்பவத்தை விசாரிக்க சுதந்திரமான ஓர் அமைப்பை உச்ச நீதிமன்றம் உருவாக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். அதேபோல, இந்த வழக்கினை அசாமுக்கு மாற்ற வேண்டும் என்ற அரசின் கோரிக்கைக்கு பாதிக்கப்பட்ட பெண்கள் தரப்பு எதிர்ப்புத் தெரிவித்தது.

இதனிடையே, அரசு சார்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, வழக்கு விசாரணையை அசாமுக்கு மாற்ற வேண்டும் என்று அரசு கூறவில்லை என்றும், வழக்கு விசாரணை எங்கு நடந்தால் சரியாக இருக்கும் என்று உச்ச நீதிமன்றம் கருதும் இடத்துக்கு வழக்கு விசாரணையை மாற்ற அரசு தயாராக இருக்கிறது என்றும் தெரிவித்தார்.

விசாரணையின் போது மணிப்பூரில் ஏற்பட்டுள்ள இனக் கலவரத்தில் பெண்களுக்கு எதிராக மே 4-ம் தேதி முதல் இதுவரை எத்தனை எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்ற உச்ச நீதிமன்றம் கேள்வி எழுப்பியது. அதற்கு மத்திய, மாநில அரசுகள் மவுனம் காத்தன.

வன்முறை தொடர்பாக மத்திய உள்துறை செயலகம் தாக்கல் செய்திருந்த பிரமாணப் பத்திரத்தில், 'கடந்த மே 4-ம் தேதி தௌபால் மாவட்டத்தில் பெண்களுக்கு எதிராக நடந்த வன்முறை மிகவும் கொடூரமானது. நாடு முழுவதும் இதுபோன்ற குற்றங்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க வழிவகை செய்யப்பட வேண்டும். இந்தச் சம்பவம் தொடர்பாக இதுவரை 7 பேர் (தாக்கல் செய்யப்பட்டபோது) கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த வழக்கின் விசாரணையை உச்ச நீதிமன்றம் வேறு மாநிலத்துக்கு மாற்ற வேண்டும். அதேபோல் குற்றப்பத்திரிகைதாக்கல் செய்யப்பட்டதில் இருந்து 6 மாத காலத்துக்குள்ள விசாரணையை முடிக்க உத்தரவிட வேண்டும்' என்று தெரிவித்திருந்தது.

மேலும் தனது ஏழு பக்க பிரமாணப் பத்திரத்தில், பெண்களுக்கு எதிரான வன்முறையை மத்திய அரசு பொறுத்துக் கொள்ளாது என்றும், பாதிக்கப்பட்ட இரண்டு பெண்களில் ஒருவரை நேரிலோ அல்லது தொலைப்பேசி வழியாகவோ அரசால் தொடர்பு கொள்ள முடியவில்லை என்றும், மாநில அரசு பாதிக்கப்பட்ட பெண்களுக்கான மறுவாழ்வு நடவடிக்கைகளை வகுத்து வைத்திருப்பதாகவும் தெரிவித்திருந்தது. அதேபோல், இந்த வன்முறை குற்றம் தொடர்பாக தலைமறைவாக உள்ள குற்றவாளிகள்பற்றிதகவல் கொடுப்பவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும் என்று மத்திய அரசு அறித்துள்ளது.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலினை நேற்று தலைமைச் செயலகத்தில், ஃபாக்ஸ்கான் நிறுவனத்தின் தலைவர் யங் லியு (Mr.Young Liu) சந்தித்து தமிழ்நாட்டில் ஃபாக்ஸ்கான் நிறுவனம் மேற்கொண்டு வரும் புதிய முதலீடுகள் குறித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர். பி.ராஜா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் கிருஷ்ணன், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் வே.விஷ்ணு, ஃபாக்ஸ்கான் நிறுவனத்தின் Chief Stratgegy Officer (Semiconductor) டாக்டர் சைய் சியாங் (Dr. SY Chiang), பொது மேலாளர் (குறைகடத்தி) டாக்டர் பாப் சென் (Dr. Bob Chen), தலைமை அலுவலக இயக்குநர் செந்தில் குமார், இந்திய பிரதிநிதி பி. லீ (Mr. V. Lee), இணை மேலாளர் ஹன்னா வேங் (Ms. Hannah Wang) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## ஆலங்குடியில் ரூ.1.75 கோடியில்

# நவீன வசதிகளுடன் நூலகம் அமைச்சர் மெய்யநாதன் தகவல்



புதுக்கோட்டை, ஆக.1–

புதுக்கோட்டை மாவட்டம்ஆலங்குடியில் நவீன வசதிகளுடன் ரூ.1.75 கோடியில் நூலகம் அமையவுள்ளதாக சுற்றுச்சூழல்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டை 6-ஆவது புத்தகத்திருவிழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தது: கல்வியால், பகுதறிவால் முன்னேறிய மாநிலம் தமிழ்நாடு. அறிஞர் அண்ணா நூற்றாண்டையொட்டி சென்னையில் மிகப்பெரிய நூலகத்தை கலைஞர் அமைத்தார். அதே போல கலைஞர் நூற்றாண்டையொட்டி மதுரையில் ரூ.250 கோடி செலவில் பிரமாண்டமான நூலகத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்துள்ளார். அறிவுச் சமூகத்தைக் கொண்ட மாநிலம் தமிழ்நாடு என்பதற்கு இதுவும் ஒரு உதாரணம் என்றார்.

நிகழ்ச்சிக்குஸ்ரீபாரதி கல்வி நிறுவனங்களின் தலைவர் குரு. தனசேகரன் தலைமை வகித்தார், 'சந்திரன் மேல குடிபோகும்காலம்' என்ற தலைப்பில் புதுதில்லி விஞ்ஞான் பிரச்சாரின் முதுநிலை விஞ்ஞானி த.வி.வெங்கடேஸ்வரன் உரையாற்றினார். கவிச்சுடர் கவிதைப்பித்தன் தலைமையில் தஞ்சை இனியன், வல்லம் ராஜகோபால், அறந்தை வெங்கடேசன், மு.பா, வீ.மா இளங்கோவன் ஆகியோர் பங்கேற்ற கவியரங்கம் நடைபெற்றது. முன்னதாக அறிவியல் இயக்க மாவட்டத் தலைவர் ம.வீரமுத்து வரவேற்ற, இணைச் செயலாளர் ஆர். பிச்சைமுத்து நன்றி கூறினார்.

## 'ரூ.1,000 திட்டத்துக்கு ஆதிதிராவிடர் சிறப்பு நிதியா?'

## முதல்வர் விளக்கம் அளிக்க அண்ணாமலை வலியுறுத்தல்



சென்னை , ஆக. 1–

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்துக்குபட்டியலின மக்களுக்கு மத்திய அரசு வழங்கும் நிதியை மடைமாற்றுவதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது குறித்து முதல்வர் ஸ்டாலின் விளக்கம் அளிக்க வேண்டும் என தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது சமூக வலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "ஆண்டுதோறும் மத்திய அரசு ஒதுக்கீடு செய்யும் தொகையை, பட்டியலின சமுதாய மக்களின் நலனுக்காகச் செலவிடாமல் திருப்பி அனுப்புவது திறனற்ற திமுக அரசின் வழக்கம். பட்டியலின சமுதாயத்தினருக்கன பள்ளிகள் மற்றும் விடுதிகளை மேம்படுத்துதல், வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு போன்றவை எதுவுமே நிறைவேற்றாமல், சென்ற ஆண்டு மத்திய அரசு வழங்கிய பட்டியலின சமுதாயத்தினர் நல நிதி சுமார் 10,000 கோடி ரூபாயை திருப்பி அனுப்பியது திமுக. ஆனால், தற்போது மகளிர் உரிமைத் தொகைவழங்குவதற்காக புதியதாக நிதி எதுவும் ஒதுக்காமல், பட்டியலின சமுதாயத்தினர் நல நிதியை மடைமாற்ற முயற்சித்தால், அது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

பட்டியலின நல நிதியை, பட்டியலின சமுதாய மக்கள் நலனுக்காக மட்டும்தான் பயன்படுத்த முடியும். ஏற்கெனவே, தமிழகத்தில் உள்ள அனைத்து மகளிருக்கும் உரிமைத் தொகை மாதம் ₹1,000 ரூபாய் வழங்குவோம் என்று பொய் வாக்குறுதி கொடுத்து, பின்னர் தகுதி உடையமகளிருக்குமட்டும் என்று ஏமாற்றிய கூட்டம், தற்போது பட்டியலின சமுதாயத்தினர் நல நிதியை மடைமாற்ற முயற்சிப்பது என்பது மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை, பிறர்மேல் பழி சொல்லி கைவிட்டுவிட்டு, தமிழக சகோதரிகளை முழுமையாக ஏமாற்றி விடலாம் என்ற எண்ணத்தில்தான் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

உடனடியாக, இந்தக் குற்றச்சாட்டுக்கு முதல்வர் ஸ்டாலின் விளக்கம் அளிக்க வேண்டும். மேலும், பட்டியலின சமுதாய சகோதர சகோதரிகளின் நல நிதியை, அதற்கான நோக்கத்தில் மட்டும்தான் பயன்படுத்த வேண்டும், அதைக் காரணமாகச் சொல்லி மகளிர் உரிமைத் தொகை திட்டத்தைக் கைவிடும் எண்ணம் இருந்தால், தமிழக சகோதரிகள் தகுந்த பதிலடி கொடுப்பார்கள்" என்று தெரிவித்துள்ளார்.




புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், சுதந்திர தின விழாவிற்கான முன்னேற்பாடு பணிகள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா, தலைமையில் நேற்று நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதப்பிரியா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) தங்கவேல், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) செய்யது முகம்மது மற்றும் அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

நம்மை நாம்
கேள்வி கேட்காதவரை..
நம் தவறுகளை
நாம் உணரபோவதில்லை...






# தேர்தலில் எங்கள் கட்சி வெற்றி பெற்றால் நவாஸ் ஷெரீப் பிரதமராவார் ஷெபாஸ் ஷெரீப்



இஸ்லாமாபாத் , ஆக.1-

நாடாளுமன்றத் தேர்தலில் பாகிஸ்தான் முஸ்லிம் லீக்-நவாஸ் கட்சி வெற்றி பெற்றால் கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமருமான நவாஸ் ஷெரீப் மீண்டும் பிரதமராவார் என்று தற்போதைய பிரதமரும், நவாஸ் ஷெரீப்பின் தம்பியுமான ஷெபாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தல் இந்த ஆண்டு இறுதிக்குள் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், அந்நாட்டு தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டி அளித்துள்ள பிரதமர் ஷெபாஸ் ஷெரீப், "கடந்த 2019-ஆம் ஆண்டு முதல் இங்கிலாந்து தலைநகர் லண்டனில் வாழ்ந்து வரும் கட்சியின் தலைவர் நவாஸ் ஷெரீப் அடுத்த சில வாரங்களில் நாடு திரும்ப இருக்கிறார். நாடு திரும்பியதும் தன் மீதான வழக்குகளை சட்ட ரீதியாக அவர் எதிர்கொள்வார். இம்ரான் கான் பிரதமராக இருந்தபோது அவரது உத்தரவுப்படி தயாரிக்கப்பட்ட மருத்துவ அறிக்கையின் அடிப்படையில் மருத்துவ காரணங்களுக்காக நவாஸ் ஷெரீப் வெளிநாடு அனுப்பப்பட்டார்.

தற்போதைய நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் ஆகஸ்ட் 12-ம் தேதியோடு முடிவுக்குவருகிறது. அதற்கு சில நாட்களுக்கு முன்பாக நாடாளுமன்றம் கலைக்கப்படும். அதற்கான அறிவிப்பு குடியரசுத் தலைவர் ஆரிப் ஆல்விக்கு அனுப்பிவைக்கப்படும். தேர்தலில் கூட்டணி கட்சிகளோடு தொகுதிப் பங்கீடு மேற்கொள்ளப்படும். எந்தெந்த தொகுதிகளில் ஒருமித்த கருத்து எட்டப்படாத நிலை உருவாகிறதோ அங்கு நாங்கள் எங்கள் வேட்பாளரை நிறுத்துவோம். பாகிஸ்தான் முஸ்லிம் லீக்-நவாஸ் கட்சியின் தலைவர் நவாஸ் ஷெரீப் மற்றும் நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ராஜா ரியாஸ் ஆகியோருடன் கலந்தாலோசனை செய்த பிறகே காபந்து அரசு அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்" என தெரிவித்தார்.

### ஜெயிலர் திரைப்படம் வெளியீட்டை முன்னிட்டு

# சிறை நூலகத்திற்கு புத்தகங்கள் மற்றும் இசைக்கருவிகளை வழங்கிய ரசிகர் மன்றத்தினர்



மதுரை, ஆக.1-

ரஜினியின் வேண்டுகோளை ஏற்று இனி மது அருந்தமாட்டோம் என மதுரை சிறைத்துறை டிஐஜி பழனி முன்பாக உறுதிமொழி ஏற்ற ரஜினி ரசிகர்கள்.

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடித்து வெளிவர உள்ள ஜெயிலர் படத்தை வரவேற்கும் விதமாக மதுரை மத்திய சிறைச்சாலையில் உள்ள சிறை கைதிகள் படிப்பதற்காக ரூ.1 லட்சம் மதிப்பிலான இலவச புத்தகங்கள் மற்றும் மியூசிக்கல்கீபோர்டுஉள்ளிட்ட பொழுதுபோக்கு விளையாட்டு உபகரணங்களை ரஜினி ரசிகர்கள், பால. நமச்சிவாயம்,கோல்டன் சரவணன், அழகர்சாமி,ஒய்வு பெற்ற காவல்துறை அதிகாரி குமாரவேல் உள்ளிட்டோர் வழங்கினர்.

மதுரை மாநகர் மாவட்ட ரஜினி மன்றத்தின் சார்பில் மதுரை மத்திய சிறைச்சாலை வளாகத்தில் நடைபெற்ற நிகழ்வில் புத்தகங்கள் வழங்கப்பட்டது, நெல்சன் இயக்கத்தில் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்தின் 169வது திரைப்படமான ஜெயிலர் திரைப்படம் ஆகஸ்ட் 10ஆம் தேதி வெளியாகவுள்ள நிலையில் அவரது ரசிகர்கள் மிகுந்த எதிர்பார்ப்போடு காத்திருக்கின்றனர். இந்நிலையில் ஜெயிலர் திரைப்படம் சிறைவாசிகளை நல்வழிப்படுத்தும் வகையிலான கதை அம்சம் என்பதால் ரசிகர்கள் அதனை முன்னிறுத்தும் வகையில் மதுரை மாவட்ட ரஜினி ரசிகர் மன்றம் சார்பில் மதுரை மத்திய சிறையில் உள்ள நூலகத்திற்கு 50ஆயிரம் மதிப்பிலான 247 புத்தகங்கள் மற்றும் பியானோ இசைக்கருவி ஸ்பீக்கர் உள்ளிட்டவற்றை சிறைத்துறை டிஐஜி பழனியிடம் வழங்கினர்.

அரசியல், இலக்கியம், ஆன்மீகம், திருக்குறள், சட்டம், வரலாற்று புத்தகங்கள், நாவல்கள், வாழ்க்கை வரலாற்று புத்தகங்கள், பகவத்கீதை, குர்ஆன், பைபிள் உள்ளிட்ட மும்மத நூல்கள் உள்ளிட்டவைகளை வழங்கினர்.

புத்தகங்களை வழங்கியதை தொடர்ந்து ஜெயிலர் ஆடியோ வெளியீட்டு நிகழ்ச்சியின் போது நடிகர் ரஜினி மது அருந்தக்கூடாது என ரசிகர்களுக்கு வேண்டுகோள் விடுத்ததை நிறைவேற்றும் வகையில் இனி மது அருந்தமாட்டோம் என டிஐஜி பழனி முன்பாக வாக்குறுதி எடுத்துக்கொண்டனர். புத்தகங்கள் வழங்கிய ரஜினி ரசிகர் மன்றத்தினருக்கு சிறைத்துறை சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது.






# திருவொற்றியூரில் மாடியில் இருந்து கீழே விழுந்து எலக்ட்ரீசியன் பலி



திருவொற்றியூர்,ஆக.1

சென்னை திருவொற்றியூர் கிராமத் தெருவை சேர்ந்த 32 வயதுடைய மணிகண்டன் எலக்ட்ரீசியன் வேலை பார்த்து வருகிறார் கடந்த பத்து வருடங்களுக்கு முன்பு கீதா என்ற பெண்ணை திருமணம் செய்து 7வயதில் யஷ்வந்த், 5 வயதில் பிரஜன் என இரு மகன்கள் உள்ளனர்

இந்நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினத்தில் மணிகண்டன் அளவுக்கு அதிகமாக குடித்துவிட்டு வீட்டில் இருந்துள்ளார்.

மதுபோதையில் மணிகண்டன் தனது வீட்டின் மொட்டை மாடியில் படுக்க சென்ற போது நிலை தடுமாறி கீழே விழுந்து முகம் கை கால்கள் அடிப்பட்டு துடிதுடித்து உயிர்ழந்தார்.

இச்சம்பவம் குறித்து திருவொற்றியூர் காவல் நிலையத்தில் தகவல் தெரிவித்தனர். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலீசார் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இச்சம்பவம் குறித்து திருவொற்றியூர் போலீசார் வழக்கு பதிவுசெய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# “விபத்துக்கு சிலிண்டர் காரணமல்ல, வீண்பழி போடாதீர்கள்” கிரிஷ்ணகிரி ஓட்டல் உரிமையாளர் குடும்பத்தினர் ஆதங்கம்



கிருஷ்ணகிரி , ஆக.1-

கிருஷ்ணகிரியில் நடந்த பட்டாசுக் கிடங்கு வெடி விபத்துக்கு சிலிண்டர் காரணம் இல்லை எனவும், வீண்பழி போடவேண்டாம் எனவும் ஓட்டல் உரிமையாளரின் குடும்பத்தினர், விசாரணை அலுவலர்களிடம் ஆதங்கத்துடன் தெரிவித்தனர்.

கிருஷ்ணகிரி பழையப்பேட்டை நேதாஜி சாலையில் கடந்த 29-ம் தேதி காலை பட்டாசுக் கிடங்கில் ஏற்பட்ட வெடி விபத்தில் 9 பேர் உயிரிழந்தனர். 15-க்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்தனர். இந்த வெடி விபத்து ஓட்டலில் இருந்த கேஸ் சிலிண்டர் வெடித்தால்தான் ஏற்பட்டது என தடயவியல் நிபுணர்கள் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சரும், உணவுத் துறை அமைச்சருமான சக்கரபாணி தெரிவித்தார்.

இந்நிலையில், இந்தப் பட்டாசு வெடி விபத்து தொடர்பாக விசாரணை நடத்திட,சிறப்புகூடுதல்மாவட்ட நிர்வாக நீதிபதி பவணந்தி நியமிக்கப்பட்டுள்ளார். நேற்று அவர் சம்பவ இடத்தில் விசாரணை மேற்கொண்டார். அப்போது பட்டாசு வெடி விபத்தில் உயிரிழந்த ஓட்டல் உரிமையாளர் ராஜேஸ்வரின் குடும்பத்தினர், விசாரணை அலுவலர்களிடம் கூறியது: "எனது தாயார் ராஜேஸ்வரி, கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனை எதிரேயும், நேதாஜி சாலையிலும் ஓட்டல்கள் நடத்தி வந்தார். விபத்துக்குள்ளான ஓட்டல் கடையில் சமையல் செய்வது கிடையாது. உணவுகள், வேறு இடத்தில் தயாரித்து,. இங்கே கொண்டு வரப்படும். விபத்து நடந்த ஓட்டலில் தோசை, ஆம்லேட் உள்ளிட்டவை சுடுவதற்காக மட்டுமே சிலிணடர் அடுப்பு பயன்படுத்தப்பட்டது.

இந்நிலையில், வெடி விபத்துக்கு சிலிண்டர்தான் காரணம் என கூறுவது மிகுந்த வேதனையளிக்கிறது. வெடி விபத்து நிகழ்ந்த இடத்தில் இருந்து எனது தாய் சடலமாக மீட்கப்பட்ட போது அவரது உடலில் தீ காயங்கள் இல்லை. கடையின் மேற்கூரை, சுவர் இடிந்து விழுந்ததில் அவர் உயிரிழந்ததாக தெரிகிறது. மேலும், மீட்பு பணியின்போது சிலிண்டர் முழுமையாக இடிபாடுகளில் இருந்து எடுத்துள்ளனர். கடையில் இருந்த திண்பண்டங்கள், பொருட்கள் அனைத்து சேதமாகி உள்ளதே தவிர, தீ பரவியதற்கான பாதிப்புகள் எதுவும் இல்லை. அப்படியிருக்க, வெடி விபத்திற்கு சிலிண்டர்தான் காரணம் என கூறுவது ஏற்றுக்கொள்ள முடியாது.

ஏற்கெனவே தாயை இழந்து தவிக்கும் எங்கள் குடும்பத்தின் மீது வீண் பழிபோடதீர்கள். சிலிண்டர் வெடித்திருந்தால் எனது தாய் உடல் சிதறிருக்க வேண்டும். எனவே, வெடி விபத்துக்கான உண்மையான காரணத்தை தெரிவிக்க வேண்டும்” என்று அவர்கள் தெரிவித்தனர். இது தொடர்பாக எழுத்துப் பூர்வமாக தெரிவிக்க விசாரணை அலுவலர், அவர்களிடம் தெரிவித்தார்.

# சைபர் க்ரைம் குற்றப்பிரிவு விரிவாக்கத்துக்கு ரூ.9.28 கோடி ஒதுக்கீடு முதல்வர் ஸ்டாலின் உத்தரவு

சென்னை , ஆக.1-

இணையதள குற்றப்பிரிவு தலைமையகத்திலுள்ள 1930 அழைப்பு மையம், கட்டுப்பாட்டு அறை ரூ.9.28 கோடி மதிப்பீட்டில் விரிவாக்கம் செய்திட தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: இணையதள குற்றங்கள் குறித்த அழைப்புகள் பெருகி வரும் நிலையில் ஏற்கெனவே உள்ள அழைப்பு மையம், கட்டுப்பாட்டு அறை விரிவாக்கம் செய்யப்பட வேண்டியுள்ளது. அதன்படி இம்மையத்தில் உள்ள 8 இருக்கைகள் இருக்கைகளாகவும், புதியதாக கூடுதல் 15 பணியாளர்களை (மூன்றாண்டுகளுக்கு ரூபாய் 9.28 கோடி) ஒப்பளிப்பு செய்யவும். முதற்கட்டமாக இந்தாண்டுக்கு 3.10 கோடி ரூபாய் வழங்கப்படும் என்று தமிழக முதல்வரால் 2023-24ஆம் ஆண்டுக்கான காவல்துறை மானியக் கோரிக்கையின் போது தமிழக சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், இணையதள குற்றப்பிரிவு தலைமையகத்திலுள்ள 1930 அழைப்பு மையம் / கட்டுப்பாட்டு அறையை 15 இருக்கைகள் கொண்ட மையமாக விரிவாக்கம் செய்திட 9.28 கோடி ரூபாய்க்கு நிர்வாக அனுமதி அளித்து முதல்வர் உத்தரவிட்டார்.

இதன்மூலம் இணையதள பொருளாதார குற்றங்கள், மோசடிகள் போன்ற குற்றங்களில் ஈடுபடும் நபர்களை விரைவாக வங்கி கண்டறிந்து, மோசடி நபர்களிடமிருந்து பணத்தை இழந்தவர்களுக்கு பணத்தை மீட்டெடுக்க உதவிடவும், பிற இணையதள குற்றங்களிலிருந்து மக்களை காத்திடவும் இவ்விரிவாக்கம் செய்யப்பட்ட 1930 அழைப்பு மையம், கட்டுப்பாட்டு அறை பெரிதும் உதவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



புதுவை அரசின் அறிவுறுத்தலின் பேரில் காரைக்கால் மாவட்ட கல்வித்துறையின் சார்பிலும் ஒவ்வொரு மாதமும் கடைசி பள்ளி நாளில் மாணவர்கள் எல். கே.ஜி. முதல் 12-ஆம் வகுப்பு வரை பேக் இல்லாமல் மாணவர்கள் பள்ளிக்கு வந்து பாடம் சாராத இதர கலை நிகழ்வுகள், ஓவியம் வரைதல் மற்றும் பல்வேறு வகையான விளையாட்டுகள் மற்றும் மாணவர்களின் பொழுது போக்கு அம்சங்கள் நேற்று அனைத்து அரசு மற்றும் தனியார் பள்ளிகளிலும் நடைபெற்றது.

# சென்னை புதுவண்ணாரப்பேட்டையில் வீட்டு வாசலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆட்டோ, இருசக்கர வாகனத்துக்கு தீ வைத்த மர்ம நபர்



சென்னை, ஆக. 1

சென்னை புதுவண்ணாரப்பேட்டை அம்மணி அம்மாள் தோட்டம் பகுதியைச் சேர்ந்த ஆட்டோஒட்டுனர் கலைச்செல்வன் இவருக்கு சொந்தமான ஆட்டோ மற்றும் யமஹா ரே, இருசக்கர வாகனத்தை தனது வீட்டு வாசலில் நிறுத்தி வீட்டு படுக்க வீட்டிற்குள் சென்றுள்ளார்.

தீடீரென நள்ளிரவு 1 மணி அளவில் வீட்டு வாசலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆட்டோ, இருசக்கர வாகனம் தீ பிடித்து ஆட்டோ கண்ணாடி வெடித்து சிதறியது சப்தம் கேட்டு வெளியே வந்து பார்த்த கலைச்செல்வன் ஆட்டோ,மற்றும் இருசக்கர வாகனம் தீ பிடித்து எரிவதை பார்த்து அதிர்ச்சி அடைந்தார்.

உடனடியாக கலைச்செல்வன் மற்றும் அவரது உறவினர்கள் தண்ணீர் ஊற்றி தீயை அணைத்தனர். இச்சம்பவம் குறித்து கலைச்செல்வன் புதுவண்ணாரப்பேட்டை போலீசார் காவல் நிலையத்தில் புகார் அளித்தார் புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து சம்பவம் நடைபெற்ற இடத்தில் சிசிடிவி கேமிரா இல்லாததால் தீ வைத்த மர்ம நபர்கள் குறித்து போலீசார் விசாரணையில் ஈடுப்பட்டு வருகின்றனர்

### சீர்காழி அருகே நான்கு வழிச்சாலைக்காக கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கு

# உரிய இழப்பீடு வழங்காததை கண்டித்து பாதிக்கப்பட்ட விவசாயிகள் பணியை தடுத்து நிறுத்தி போராட்டம்



சீர்காழி, ஆக,1

விழுப்புரம் முதல் நாகப்பட்டினம் மாவட்டம் வரை நான்கு வழி சாலை அமைக்கும் பணி கடந்த சில ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. இதன் ஒருபகுதியாக மயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடத்தில் இருந்து தரங்கம்பாடி வரை நான்கு வழி சாலை அமைக்கும் பணிகள் இரவு பகலாக நடைபெற்று வருகிறது.

இப்பணிக்காக சீர்காழி தாலுக்கா பகுதியைச் சேர்ந்த 9 ஊராட்சிகளில் ஐந்தாயிரம் ஏக்கருக்கு மேல் விளைநிலங்கள் கையகப்படுத்தப்பட்டது.

இந்நிலையில் கையகப்படுத்தப்பட்ட இடங்களுக்கு உரிய இழப்பீடு தொகை வழங்காமல் பணிகள் நடைபெறுவதாக குற்றம் சாட்டிய பாதிக்கப்பட்ட 20க்கும் மேற்பட்ட விவசாயிகள் சீர்காழி புறவழிச் சாலையில் நேற்று பணியை தடுத்து நிறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்பொழுது நான்கு வழிச்சாலை பணிக்காக மண் ஏற்றி வந்த லாரிகளை தடுத்து நிறுத்தி சிறை பிடித்து உரிய இழப்பீடு வழங்க கோரி கோஷங்களை எழுப்பினர்.

இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது தகவல் அறிந்த சீர்காழி நில எடுப்பு தனி வட்டாட்சியர் விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தி உரிய நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தனர். ஆனால் விவசாயிகள் அதனை ஏற்க மறுத்து தொடர் போராட்டத்தில் ஈடுப்பட்டு வருகின்றனர்.



மதுரை தெற்கு ரோட்டரி சங்கத்தின் 50 ஆவது பொன்விழா ஆண்டில் புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழா பைபாஸ் ரோட்டில் உள்ள மதுரை குமார் மெஸ் அரங்கத்தில் நடைபெற்றது. எஸ். பாலகிருஷ்ணன் வரவேற்புரை ஆற்றினார். இந்நிகழ்வில் ரோட்டரி மாவட்டம் 3000த்தின் முன்னாள் மாவட்ட ஆளுநர் பி டி ஜி. ஆர். சண்முகசுந்தரம் மற்றும் சிறப்பு விருந்தினராகவும் டி ஜி இ. ஆர். ராஜ கோவிந்த சுவாமி சிறப்பு அழைப்பாளராகவும் கலந்து கொண்டனர். புதிய தலைவராகவும் பி ஹெச் எப். டி. ராமச்சந்திரகுமார் செயலாளராகவும், எஸ். பிரபு பொருளாளராகவும் பதவியேற்றனர். இவர்களுடன் அறம் ஆண்டின் புதிய நிர்வாகிகளும் பதவியேற்றனர். மேலும், இந்நிகழ்வில் ரோட்டரி மாவட்டத்தின் முன்னாள் ஆளுநர் பி டி ஜி. புருஷோத்தமன், மண்டல ஒருங்கிணைப்பாளர் சி. முருகானந்த பாண்டி மற்றும் ரோட்டரி உறுப்பினர்கள் தங்கள் குடும்பத்தினருடன் பங்கேற்றனர்.

# காரைக்கால் மாவட்ட நிர்வாகம் மற்றும் கலை பண்பாட்டு துறை மற்றும் தஞ்சை தென்னகப் பண்பாட்டு மையம் இணைந்து புதுவை கலைவிழா-2023



காரைக்கால் , ஆக.1-

காரைக்காலில் ஆகஸ்ட் 15 மற்றும் 16 ஆகிய இரு தினங்கள சிறப்பாக கொண்டாடுவது சம்பந்தமாக போக்குவரத்து மற்றும் கலை பண்பாட்டுத்துறை அமைச்சர் சந்திர பிரியங்கா தலைமையில் ஆட்சியர் வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் முன்னிலை வகித்தார்கள்.

மேலும் இந்நிகழ்வில் முதுநிலை காவல் கண்காணிப்பாளர் மணிஷ் துணை மாவட்ட ஆட்சியர் ஜான்சன் காவல் கண்காணிப்பாளர் (வடக்கு) மற்றும் பொதுப்பணித்துறை, நலவழித்துறை, சுகாதாரத்துறை, செய்தி மற்றும் விளம்பரத்துறை, தீயணைப்பு துறை உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

இந்நிகழ்வில் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும் வெளியூர் கலைஞர்கள் சுமார் 60-க்கும் மேற்பட்டோர் தங்குவதற்கு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் சம்பந்தமாகவும் ஆலோசிக்கப்பட்டன. அப்போது அமைச்சர் அதிகாரிகளை கேட்டுக் கொள்கையில் உள்ளூர் கலைஞர்கள் உட்பட அனைத்து கலைஞர்களுக்கும் முன்னுரிமை அளிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்கள்.

மேலும் இரண்டு நாள் விழாவில் முதல் நாள் கடற்கரைச் சாலையிலும் இரண்டாம் நாள் பூவம் பகுதியிலும் விழா நடைபெற ஆலோசனை நடைபெற்றது. சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு கலை விழா சிறப்பாக காரைக்காலில் கொண்டாட அமைச்சர் அதிகாரிகளை கேட்டுக் கொண்டார்.

# ஆத்துப்பாக்கம் அருள்மிகு ஸ்ரீ திரௌபதி அம்மன் திருக்கோவிலின் தீமிதி திருவிழா 13 ஆண்டுகளுக்கு பின்னர் நடைபெற்றது





ஊத்துக்கோட்டை, ஆக1–

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், ஆத்துப்பாக்கம் ஊராட்சியில் அருள்மிகு ஸ்ரீ திரௌபதி அம்மன் திருக்கோவில் உள்ளது. பழமை வாய்ந்த இத்திருகோவிலில் 13 ஆண்டுகளுக்கு பின்னர் நேற்று முன்தினம் இரவு தீமிதி திருவிழா நடைபெற்றது. இதில், காப்பு கட்டி விரதம் இருந்த 350 பக்தர்கள் தீ மிதித்து தங்களது நேர்த்தி கடனை செலுத்தினர்.

தீமிதி திருவிழாவை முன்னிட்டு கடந்த 21-ம் தேதி வெள்ளிக்கிழமை கோவிலில்கொடியேற்றும் நிகழ்ச்சியும், பக்தர்களுக்கு காப்பு கட்டும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. அன்றிலிருந்து நாள்தோறும் பல்வேறு வகையான பூஜைகள், கரகம் திருவீதி உலா வரும் நிகழ்ச்சி, கூழ் ஊற்றும் நிகழ்ச்சி உள்ளிட்டவை நடைபெற்றது. நேற்று முன்தினம் மாலை ஆத்துப்பாக்கம் கிராமத்தில் உள்ள முனுசாமிதாத்தாகோவில் அருகே காப்பு கட்டி விரதம் இருந்த குமார மக்கள் புனித நீராடும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதன் பின்னர், பூக்களாலும், மின் விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்ட அம்மன் ஊர் எல்லைக்கு சென்று பக்தர்களை கோவிலுக்கு அழைத்து வரும் நிகழ்ச்சி வானவேடிக்கையுடன் நடைபெற்றது. இதன் பின்னர், கோவிலின் எதிரே அமைக்கப்பட்டு இருந்த தீக்குண்டத்தில் ஒருவர் பின், ஒருவராக இறங்கிதீ மிதித்து தங்களது நேர்த்திக் கடனை செலுத்தினர்.

இதன் பின்னர், மங்கள வாத்தியம் இசைக்க பூக்களாலும், மின்விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்ட அம்மன் வானவேடிக்கையுடன் முக்கியவீதிகளின்வழியாக திருவீதி உலா வரும் நிகழ்ச்சி நடைபெற்றது. நேற்று மஞ்சள் நீராட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிகளில் ஆத்துப்பாக்கம் சுற்று வட்டாரத்தைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்காண ஏற்பாடுகளை ஆத்துப்பாக்கம் கிராம பொதுமக்களும், விழா குழுவினர்களும் சிறப்பாக செய்திருந்தனர்.

# "எம்ஜிஆர், ஜெயலலிதாவுக்கு அமித் ஷா புகழாரம் சூட்டலாம். ஆனால்..."

## ஜெயக்குமார் கருத்து



சென்னை , ஆக.01–

"யாராக இருந்தாலும் எம்ஜிஆர், ஜெயலலிதா பெயரை சொல்லித்தான் ஆக வேண்டும். அந்த அளவுக்கு அவர்கள் கொண்டு வந்த திட்டங்கள் காலத்தால் அழிக்க முடியாத ஒரு நிலையில் இருக்கிறது" என்று அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கூறியுள்ளார்.

சென்னையில் அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார், அக்கட்சியின் தலைமை அலுவலகத்தில் திங்கள்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவரிடம், பாஜக கூட்டத்தில் பேசிய மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, எம்ஜிஆர், ஜெயலலிதா கொண்டு வந்த திட்டங்களை மீண்டும் வருவதற்காகத்தான் அண்ணாமலை பாத யாத்திரை செல்கிறார் என்று பேசியது குறித்து கேட்கப்பட்டது.

அதற்கு பதிலளித்த அவர், "ஒரு விஷயத்தை நன்றாக புரிந்து கொள்ளுங்கள். எங்களது தலைவர், தலைவி. காலத்தால் அனைவராலும் உச்சரிக்கப்படக் கூடிய, மாபெரும் தலைவர்கள். அந்தவகையில், உள்துறை அமைச்சர் அமித் ஷா அவர்களை குறிப்பிட்டு பேசியதை பாராட்ட வேண்டும். ஏனென்றால், யாராக இருந்தாலும் எம்ஜிஆர், ஜெயலலிதா பெயரை சொல்லித்தான் ஆக வேண்டும். அந்தளவுக்கு அவர்கள் கொண்டு வந்த திட்டங்கள் காலத்தால், அழிக்க முடியாத ஒரு நிலையில் இருக்கிறது. அதை நாங்கள் பெருமையாகத்தான் நினைக்கிறோம்.

ஆனால், அதேநேரத்தில் அந்தத் திட்டங்களை செயல்படுத்துகிற ஒரு அதிமுகவின் அரசாகத்தான் இருக்கும். வேறு யாராலும் அதைசெய்யமுடியாது. எனவே, யார் வேண்டுமானாலும் எங்களது தலைவர்களின் புகழ் பாடிக் கொள்ளுங்கள். ஆனால், அவர்களது திட்டங்களை நாங்கள்தான் செயல்படுத்துவோம்" என்று கூறினார்.

# சூளைமேனி கிராமம் அருள்மிகு ஸ்ரீ எலமாத்தம்மன் திருக்கோவிலின் 8–ம் ஆண்டு தீமிதி திருவிழா





## காப்பு கட்டி விரதம் இருந்த 296 பேர் தீ மிதித்தனர்

ஊத்துக்கோட்டை, ஆக1–

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், சூளைமேனி ஊராட்சியின் கிராம தேவதையான அருள்மிகு ஸ்ரீ எலமாத்தம்மன் திருக்கோவில் உள்ளது. பழமை வாய்ந்த இக்கோவிலில் 8-ம் ஆண்டு தீமிதி திருவிழா நேற்று முன் தினம் இரவு நடைபெற்றது.11 நாட்கள் நடைபெற்ற இத்தீமிதி திருவிழா கடந்த 21-ம் தேதி கொடி ஏற்றத்துடன் துவங்கியது. அன்று பக்தர்களுக்கு காப்பு கட்டும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நாள்தோறும் கரகம் ஊர்வலம், சுவாமி திருவிதி உலா, தீச்சட்டி ஊர்வலம், திருக்கல்யாண உற்சவம், முளைப்பாரி ஊர்வலம், அடித்தண்டம் போடுதல், நா வளகு போடுதல், பால்குட ஊர்வலம், விளக்கு பூஜை, சறுக்கு மரம் ஏறுதல் என்னும்வீரவிளையாட்டு நிகழ்ச்சி, கங்கை திரட்டி அக்கினி எடுத்தல், அழகு பானை ஆலயத்தில் நிறுத்துதல் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

நேற்று முன்தினம் மாலை காப்பு கட்டி விரதம் இருந்த குமார மக்கள் ஊர் எல்லையில் புனித நீராடினர். பின்னர், அவர்களை பூக்களாலும், மின்விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்ட அம்மன் சென்று மங்கள வாத்தியம்மற்றும்கைலாய வாத்தியம்இசைக்க,வான வேடிக்கையுடன் அழைத்து வரும் நிகழ்ச்சி நடைபெற்றது. நேற்று முன்தினம் இரவு கோவிலின் எதிரே அமைக்கப்பட்டு இருந்த தீக்குண்டத்தில் ஒருவர் பின், ஒருவராக இறங்கி தீ மிதித்து தங்களது நேர்த்திக் கடனை செலுத்தினர்.

இதன் பின்னர், சுவாமி முக்கிய வீதிகளின் வழியாக திருவீதி உலா வரும் நிகழ்ச்சியும், தெருக்கூத்து நிகழ்ச்சியும் நடைபெற்றது. நேற்று மஞ்சள் நீராட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிகளில் சுற்று வட்டாரத்தைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் தங்களது குடும்பத்துடன் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கிராம பொதுமக்கள், பக்தர்கள், விழா குழுவினர்கள், இளைஞர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

## அரியலூர் மாவட்டம் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

# மாவட்ட ஆட்சித்தலைவர் ஆனி மேரி ஸ்வர்ணா தலைமையில் நடைபெற்றது



அரியலூர் , ஆக.01–

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், "மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்" மாவட்ட ஆட்சித்தலைவர் ஆனி மேரி ஸ்வர்ணா, தலைமையில் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில், முதியோர் உதவித் தொகை, இலவச வீட்டு மனைப்பட்டா, மாற்றுத்திறனாளி உதவித்தொகை, தொழில்கடன், பசுமை வீடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 336 மனுக்கள் பொதுமக்களிடமிருந்து மாவட்ட ஆட்சித்தலைவரால் பெறப்பட்டு, இம்மனுக்கள் மீது சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.

முன்னதாக மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்சிறுபான்மையினர் நல அலுவலகம் சார்பில் உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள 6 பயனாளிகளுக்கு ரூ.30,867 மதிப்பில் விலையில்லா மிதிவண்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் கலைவாணி, மாவட்ட ஆட்சியரின் நேர்முகஉதவியாளர்(பொது) பூங்கோதை, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் உமாமகேஸ்வரன் மற்றும் அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# விலை மேலும் அதிகரிப்பு எதிரொலி: தமிழகத்தில் 500 ரேஷன் கடைகளில் தக்காளி விற்பனை



சென்னை , ஆக.01–

தமிழகத்தில் இன்று முதல் 500 நியாய விலைக் கடைகளில் தக்காளி விற்பனை செய்யப்படும் என்று கூட்டுறவுத் துறை அமைச்சர் பெரியகருப்பன் கூறியுள்ளார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரியகருப்பன் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியது: "தக்காளி விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. வட மாநிலங்களில் பெய்த கனமழையால், தக்காளி விளைச்சல் குறைந்தது. விளைச்சல் குறைந்ததால்தான், இந்த அளவுக்கு தக்காளியின் விலை அதிகரித்துள்ளது.

உள்ளூர் மற்றும் வெளி மாநிலங்களில் வரும் தக்காளி வரத்து குறைவால், விற்பனைக்கு வரும் தக்காளியின் அளவு குறைந்துள்ளது. எனவே, இது இயற்கையான விலையேற்றமே தவிர, செயற்கையானது அல்ல. வணிகர்கள் ஓரளவுக்கு ஒத்துழைப்பு கொடுக்கின்றனர். அதனால்தான், தக்காளி விலையேற்றம் கட்டுக்குள் இருக்கிறது. தக்காளியை தமிழக அரசு கூடுதலான விலைக்கு வாங்கி, அதை கூட்டுறவு சங்கங்கள் மூலமாக நியாய விலைக் கடைகள் மூலம் விநியோகம் செய்து வருகிறோம். முதல்வர் இந்த விற்பனையை மேலும் விரிவுப்படுத்த வேண்டும் என்று எங்களுக்கு உத்தரவிட்டார்.

அதைத்தொடர்ந்து மூன்றாம் கட்டமாக, 300 நியாய விலைகடைகளுக்கு அதை விரிவுபடுத்தினோம். தொடர்ந்து பல மாநிலங்களில் இதே பிரச்சினை இருந்து வருகிறது. எனவே இந்த எண்ணிக்கை போதாது, இன்னும் பரவலாக்க வேண்டும் என்ற நோக்கில், இன்று முதல், தமிழகத்தில் குறைந்தது 500 நியாய விலைக் கடைகளில் தக்காளி விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தக்காளி உற்பத்திக்கான பகுதிகளில் இருந்து போதுமான விளைச்சல் வரவில்லை என்பதுதான், நாட்டின் பல மாநிலங்களில் இருந்து வரக்கூடிய செய்தியாக இருக்கிறது. ஓரிரு வாரங்களில் இது சரியாகும் என்று எதிர்பார்த்தோம். ஆனால், ஒரு மாதத்தை கடந்துவிட்ட நிலையிலும் இன்னும் தக்காளி உற்பத்தி அதிகரிக்கவில்லை என்பது கவலையளிக்கிறது" என்று அவர் கூறினார்.

**ரூ.150 ஆக உயர்வு:** முன்னதாக, கோயம்பேடு சந்தையில் தக்காளி விலை கிலோ ரூ.150-ஆக உயர்ந்துள்ளது. அதேநேரத்தில், பண்ணை பசுமைக் கடைகளில் கிலோ ரூ.60-க்கு விற்கப்படுவதால், பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து, தக்காளி வாங்கிச் செல்கின்றனர்.

நாடு முழுவதும் கடந்த 2 மாதங்களாகத் தக்காளி விலை கடுமையாக அதிகரித்துள்ளது. கடந்த ஒரு மாதமாக கோயம்பேடு சந்தையில் கிலோ ரூ.100-க்கு மேல் விற்கப்பட்ட நிலை யில், நேற்று கிலோ ரூ.150 ஆக உயர்ந்துள்ளது. கோயம்பேடு சந்தைக்கு ஆந்திரா மற்றும் கர்நாடக எல்லையோர மாவட்டங்களில் இருந்து தக்காளி வரத்து இருக்கும். தற்போது வெவ்வேறு மாநிலங்களுக்கு தக்காளி அனுப்பப்படுவதால், விலை உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

**பிரியாணி விலை உயருமா?** - தக்காளி விலை உயர்வால் பெரும்பாலான ஹோட்டல்களில் தக்காளி சட்னிக்குப் பதிலாக, புதினா சட்னி வழங்கப்பட்டு வருகிறது. பிரியாணி ஹோட்டல்களில் தக்காளி முக்கியப் பயன்பாடு கொண்டதாக இருப்பதால், பிரியாணி விலையை ஏற்றுவது தொடர்பாக கடைக்காரர்கள் ஆலோசித்து வருகின்றனர். வீடுகளில் தக்காளி வாங்குவதைத் தவிர்த்து வருகின்றனர். பலர் தக்காளி பயன்பாட்டைக் குறைத்துக் கொண்டுள்ளனர்.

அதேநேரத்தில், பண்ணைப் பசுமை கடைகள் மற்றும் ரேஷன் கடைகளில் கிலோ ரூ.60-க்கு விற்கப்படுவதால், அங்கு கூட்டம் அலை மோதுகிறது. விரைவிலேயே தக்காளி விற்றுத் தீர்ந்துவிடுகிறது. எனவே, கூடுதலாக விற்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். சென்னை அண்ணா சாலை, தேனாம்பேட்டையில் உள்ள காமதேனு சிறப்பங்காடியில் பொதுமக்கள் நேற்று நீண்ட வரிசையில் காத்திருந்து, தக்காளி வாங்கிச் சென்றனர்.

# செம்பனார்கோயில் ஒழுங்குமுறை விற்பனை ஒரே மாதத்தில் 1,850 டன் பருத்தி ரூ. 8 கோடிக்கு கொள்முதல்



**செம்பனாகோயில், ஆக.01–**

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுகா செம்பனார்கோயிலில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விவசாயிகளின் விளைபொருட்கள் தேசிய வேளாண் மின்னணு சந்தை திட்டத்தின்படி இ-நாம் மூலம் மறைமுக ஏலம் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் தற்போது செம்பனார்கோயில் பகுதியில் விவசாயிகள், தங்களது வயலில் சாகுபடி செய்த பருத்தியை அறுவடை செய்து விற்பனை செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் விவசாயிகளின் நலன் கருதி நாகை விற்பனை குழுவின் செம்பனார்கோயிலில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடத்தின் மூலம் தேசிய வேளாண் மின்னணு சந்தை திட்டத்தின் கீழ் இ-நாம் முறையில் கடந்த ஜூன் மாதம் 19-ஆம் தேதி முதல் பருத்தி மறைமுக ஏலம் தொடங்கியது. அதனை தொடர்ந்து ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை அன்று பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. இதில் மஹாராஷ்ட்ரா, ஆந்திரபிரதேசம், கர்நாடகா போன்ற வெளிமாநில மில் அதிபர்களும், தேனி, கோவை, சேலம், தஞ்சாவூர், விழுப்புரம், கடலூர், திருவாரூர், மதுரை, திண்டுகல் போன்ற வெளிமாவட்ட மில் அதிபர்களும்கலந்துகொண்டு விவசாயிகள் எடுத்து வரும் பருத்தியை கொள்முதல் செய்து வருகின்றனர். அதன்படி நேற்று பருத்தி ஏலம் நடைபெற்றது.

இதில் பல்வேறு பகுதிகளை சேர்ந்த மில் அதிபர்களும், வியாபாரிகளும் கலந்து கொண்டு பருத்தியை கொள்முதல் செய்தனர். அந்த வகையில் கடந்த ஒரே மாதத்தில், செம்பனார்கோயிலில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடத்தின் மூலம் சுமார் 1,850 டன் பருத்தி சுமார் ரூ.8 கோடிக்கு கொள்முதல் செய்து சாதனை படைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# மணிப்பூர் மக்களிடம் எதிர்க்கட்சி எம்பிக்கள் கேட்டறிந்ததை நாங்கள் அறிய விரும்புகிறோம் நிர்மலா சீதாராமன்



புதுடெல்லி, ஆக.01–

எதிர்க்கட்சி எம்பிக்கள் மணிப்பூர் சென்று அங்கு மக்கள் கூறியதை கேட்டு வந்துள்ள நிலையில், அது குறித்து அவர்கள் கூற, நாங்கள் கேட்க விரும்புகிறோம் என்று மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

மணிப்பூர் விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றம் தொடர்ந்து முடக்கப்பட்டு வரும் நிலையில், இது குறித்து செய்தியாளர்களிடம் அவர் கூறியது: "மணிப்பூர் இன வன்முறை குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க அரசாங்கம் ஒப்புக்கொண்டது. ஆனால், எதிர்க்கட்சிகள் விவாதம் நடத்த அனுமதிக்கவில்லை. எதிர்க்கட்சி எம்பிக்கள் மணிப்பூருக்குச் சென்று, அங்குள்ள மக்களிடம் பேசிவிட்டு திரும்பி வந்துள்ளனர். மணிப்பூரில் உள்ள மக்களிடம் அவர்கள் கேட்டதை நாங்கள் கேட்க விரும்புகிறோம். நாடாளுமன்றத்தில் அதுபற்றி அவர்கள் பேசுவதை யார் தடுக்கிறார்கள்.

நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தவர்கள் ஏன் விவாதிக்க மறுக்கிறார்கள். அவர்கள் முதலைக் கண்ணீர் வடிக்கிறார்கள் என்பது தெளிவாகிவிட்டது. மணிப்பூர் குறித்த அவர்களின் கவலை உண்மையாக இருந்திருந்தால், அவர்கள் நாடாளுமன்ற விவாதத்தை அனுமதித்திருப்பார்கள். எதிர்க்கட்சிகளின் பாசாங்குத்தனத்தை இந்த நிகழ்வு அம்பலப்படுத்துகிறது. மணிப்பூர், மணிப்பூர் என்று கூறி, அவர்கள் நாடாளுமன்றத்தின் செயல்பாட்டை முற்றிலுமாக சீர்குலைத்துள்ளனர். நாடாளுமன்றத்தின் செயல்பாட்டை சீர்குலைப்பதற்காக மட்டுமே அவர்கள் மணிப்பூர் குறித்து விவாதிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள். எதிர்க்கட்சிகளின் மனநிலை அவர்கள் அணிந்திருந்த ஆடைகளைப்போலவே கருப்பு.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியின்போது, மணிப்பூரில் சாலை மறியல் போராட்டம் தொடர்ந்து நடந்தபோது ஒரு வருடத்திற்கு எந்த உள்துறை அமைச்சரும் அங்கு செல்லவில்லை. ஆனால், தற்போது உள்துறை அமைச்சர் அமித் ஷா, மணிப்பூரில் மூன்று நாட்கள் இருந்தார். நிவாரண முகாம்களில் இருந்து முகாம்களுக்குச் சென்று மக்களைச் சந்தித்தார். ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் மணிப்பூருக்குச் சென்ற உள்துறை அமைச்சர் யார்? ஒருவேளை மத்திய இணை அமைச்சர் ஒருவர் சென்றிருக்கலாம்" என்று நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

# சீர்காழியில் திமுக, மதிமுக, பாமக, உள்ளிட்ட மாற்றுக் கட்சிகளில் இருந்து அஇஅதிமுகவில் இணையும் விழா



சீர்காழி, ஆக,1

அதிமுக மாவட்ட செயலாளர் பவுன்ராஜ் தலைமையில் நடைபெற்ற விழாவில் முன்னாள் அமைச்சர் ஓ.எஸ். மணியன் கலந்து கொண்டு மாற்று கட்சியிலிருந்து விலகி வந்தவர்களை சால்வை அணிவித்து வரவேற்றார்.

முன்னாள்சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மதிமுகவிலிருந்து அண்மையில் விலகி எடப்பாடி பழனிச்சாமி முன்னிலையில் அதிமுகவில் இணைந்த முன்னாள் மதிமுக மாவட்ட செயலாளர் மார்கோனி ஏற்பாட்டில் நடந்தவிழாவில்பங்கேற்ற முன்னாள் அமைச்சர் ஓ.எஸ். மணியன் செய்தியாளர்களிடம் கூறுகையில், கடைமடைப்பகுதிகளில் குறுவைப் பயிர்களின் நிலை மிகவும் மோசமாக உள்ளது. கடைமடை பகுதிக்கு தண்ணீர் வந்து சேராததால் நேரிடை விதைப்பு மற்றும் நடவு செய்த குறுவை பயிர்கள் செத்து மடியும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் அரசு இதனை காக்க எந்தவித நடவடிக்கையும் எடுத்ததாக தெரியவில்லை.

அதேபோல் குடிநீர் பற்றாக்குறையும் நிலவுகிறது. ஆறு நாளுக்கு ஒருமுறை 8 நாளுக்கு ஒருமுறை சில இடங்களில் மாதக் கணக்கில் குடிநீர் வராத நிலை உள்ளது. இதனை களைய வேண்டிய அரசு மெத்தனமாக உள்ளது. குறுவை நேரடி மற்றும் நடவு பயிர்கள் 75% அழிந்துவிட்டது மீதமுள்ள பயிர்களை காப்பாற்ற முறை வைக்காமல் பாசனத்திற்கு அரசு போதிய தண்ணீர் வழங்க வேண்டும். இதில் அரசு கவனம் செலுத்துவதாக தெரியவில்லை. குறுவை பயிர்களில் இரண்டு வகையில் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நேரடி விதைப்பு செய்த குறுவை முளைக்காத நிலையில் அதனை பிடுங்கி நடவு செய்த பயிர்களும் தண்ணீர் இன்றி செத்து மடிந்து விட்டது .முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி ஆட்சிக்காலத்தில் குறுவை பயிருக்கு நஷ்ட ஈடாககாப்பீட்டுதிட்டம் இருந்தது. ஆனால் திமுக ஆட்சியில் குறுவைக்கு காப்பீடு திட்டம் இல்லாத நிலை உள்ளது. குருவை காப்பீட்டை அமல்படுத்துவதில் அரசு தவறிவிட்டது.

என்.எல்.சி விவகாரத்தில் கதிர்கள் வந்த பயிர்கள் 10, 15 தினங்களில் அறுவடைக்கு தயாராக இருந்தது. என்எல்சி வாய்க்கால் வெட்டி மண்ணை போட்டு நெல்மணி முளைத்த வயல்களை சேதப்படுத்தியது. கொடுரமான தாக்குதல் ஆகும் பிள்ளைகளை இழந்து தவிப்பது போன்று பயிர்களை இழந்து விவசாயிகள் கொடுமையான செயலாகும் இதனை அரசு தவிர்த்து இருக்க வேண்டும் ஆனால் அதை தடுக்காமல் அதற்கு அரசு துணைபோனதுதவறான செயலாகும்.

ஜூன் 12 மேட்டூரில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறப்பதை சாதனையாக நினைத்து திமுக அரசு தண்ணீர் திறந்துவிட்டது. ஆனால் தண்ணீர் திறப்பிற்கும் முன்பு நிபுணர்களை அழைத்து பருவமழை பொழிவு எவ்வாறு இருக்கும்என ஆராயாமல் தண்ணீர் திறந்ததால் தற்போது பாசன வாய்க்கால்களிலும் தண்ணீர் இல்லை மேட்டூரிலும் தண்ணீர் இல்லாத நிலை உள்ளது,

இதனால் கடைமடை பகுதிகளில் பயிர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனை ஆய்வு செய்ய அரசு தவறிவிட்டது. என்எல்சி நிறுவனம் அறுவடை முடியும்வரை வாய்க்கால் அமைக்கும் பணியை நிறுத்தி வைக்க நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் என்றார். திமுக அரசு எதிர்க்கட்சியான அதிமுகவே விமர்சிப்பதை விட பாஜகவைதான் அதிக அளவு விமர்சிக்கிறது என்ற கேள்விக்கு திமுக இடிஐ பார்த்து இடி விழுந்தால் போல் அஞ்சுகின்றனர். அதனால் தான் பாஜகவை விமர்சனம் செய்வதாக தெரிவித்தார்.

# மறமடக்கியில் மாபெரும் எண்ணெய் பனை நடவு விழாவினை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் துவக்கி வைத்தார்



அறந்தாங்கி , ஆக.1-

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டாரம், மறமடக்கி கிராமத்தில், தோட்டக்கலை - மலைப்பயிர்கள் துறை சார்பில், மாபெரும் எண்ணெய் பனை நடவு விழாவினை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேற்று துவக்கி வைத்தார்.

பின்னர் தெரிவித்ததாவது; தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் முன்னேற்றத்தில் அதிக அக்கரைகொண்டு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அந்த வகையில், அறந்தாங்கி வட்டாரம், மறமடக்கி கிராமத்தில், மாபெரும் எண்ணெய் பனை நடவு விழா இன்றையதினம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு மாபெரும் எண்ணெய் பனை நடவு விழா ஜூலை 25 முதல் ஆகஸ்ட் 5 வரை துவக்கி வைத்திடவும், அதில் நடப்பு ஆண்டு பொருள் இலக்கீட்டில் 75மூ சாதனை அடைந்திடவும் அறிவுறுத்தியதனை தொடர்ந்து மாபெரும் எண்ணெய் பனை நடவு விழாவானது அறந்தாங்கி வட்டாரம், மறமடக்கி கிராமத்தில் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

தோட்டக்கலைத் துறையின் மூலம் தேசிய சமையல் எண்ணெய் இயக்கம் - எண்ணெய் பனை திட்டமானது செயல்படுத்தப்பட்டு வருகிறது. பாமாயில் பழக்குழைகளுக்கு மத்திய மாநில அரசின் குறைந்தபட்ச ஆதரவு விலை டன் ஒன்றிற்கு ரூ.13,346- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எண்ணெய் பனை திட்டமானது கோட்ரேஜ் நிறுவனத்துடன்இணைந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. புதுக்கோட்டை மாவட்டத்தில் சுமார் 22 எக்டர் பரப்பளவில் எண்ணெய் பனை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

நடப்பாண்டில் 50 எக்டர; பரப்பளவில் இலக்கீடு பெறப்பட்டுள்ளது. பரப்பு விரிவாக்கம் இனத்தில் கீழ் முதலாமாண்டிற்கு எண்ணெய் பனை கன்றுகள் ஒரு எக்டருக்கு 143 எண்கள் வீதம் ரூ.29,000- மானியத்தில் வழங்கப்படுகிறது. பராமரிப்பு இனத்தின் கீழ் நான்கு வருடத்திற்கு பராமரிப்பு மேற்கொள்ளப்படுகிறது. ஒரு வருடத்திற்கு ரூ.5,250- வீதம் நான்கு வருடத்திற்கு மானியம் வழங்கப்படுகிறது. ஊடுபயிர் இனத்தின் கீழ் வருடத்திற்கு ரூ.5,250- வீதம் மானிமாக நான்கு ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது.

எண்ணெய் பனை சாகுபடி செய்வதற்கான உபகரணங்கள் மற்றும் கருவிகள் மானியத்தில் வழங்கப்படுகிறது. எண்ணெய் பனை சாகுபடி செய்வதற்கு அதிகளவு தண்ணீர் தேவைப்படுவதனால் தேர்வு செய்யப்பட்டுள்ள விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் புதிதாக ஆழ்துளை கிணறு அமைக்க ரூ.50,000- மற்றும் புதிதாக மின்மோட்டார் வாங்கிட ரூ.22,500- மானியமாகவும் வழங்கப்படுகிறது.

எண்ணெய் பனை நடவுசெய்து மூன்று முதல் நான்கு வருடங்களில் பழங்கள் அறுவடைக்கு வந்துவிடும். எக்டர் ஒன்றுக்கு 20 முதல் 25 டன் வரை மகசூல் பெறலாம். டன் ஒன்றுக்கு ரூபாய் 12,000- முதல் 13,000- வரை கோட்ரேஜ் நிறுவனத்தின் மூலம் நேரடியாக கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால் விவசாயிகளுக்கு விற்பனை செய்வதில் சிரமம் ஏற்படாது என அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், துணை இயக்குநர் (தோட்டக்கலை) குருமணி, மாவட்ட ஊரக வளர்ச்சித்துறை செயற்பொறியாளர் பாலகிருஷ்ணன், அறந்தாங்கி ஒன்றியக்குழுத் தலைவர் மகேஸ்வரிசண்முகநாதன், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் பிறந்த நாள் விழா



புதுக்கோட்டை , ஆக.1-

முதல் பெண் மருத்துவர், சட்டமன்ற உறுப்பினராக, சென்னை மாநகர மேயராக, பெண் விடுதலைக்கான போராளியாக புதுக்கோட்டைமண்ணின் மைந்தரான டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையாரின் 138 வது பிறந்த நாளையொட்டி புதுக்கோட்டை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நகரகுழு சார்பாக புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைவளாகத்தில் அமைந்துள்ள டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் அவர்களின் திருவுருவசிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது.

நிகழ்விற்கு நிரஞ்சனா தலைமை தாங்கினார். மாவட்ட செயற்குழு உறுப்பினர் நாகராஜன் மாவட்டக்குழு உறுப்பினர் ஜெயபால் மற்றும் காயத்ரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். எல்ஐசி அசோகன், சிவகங்கை மாவட்ட குழு உறுப்பினர் வடிவேல் சிறப்புரையாற்றினர். நகரக்குழுஉறுப்பினர்கள் ரகுமான், பழ.குமரேசன், முத்தையா, மாதர் சங்கத் முத்துமாரி, பரமேஸ்வரி ,கிரிஜா, சித்ரா வாலிபர் சங்கத்தைச் சேர்ந்த விக்கி, மாணவர் சங்கத்தை சேர்ந்த ஓவியா மற்றும் மாற்றுத்திறனாளி சங்கத்தினர் கலந்துக்கொண்டனர்.

# மணிப்பூர் சம்பவத்தைக் கண்டித்து ஆலங்குடியில் சிபிஎம் ஆர்ப்பாட்டம்



புதுக்கோட்டை, ஆக.1-

மணிப்பூர் மாநிலத்தில் நடைபெற்றுவரும் பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமையைக் கண்டித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு கட்சியின் ஒன்றியச் செயலாளர் எல். வடிவேல் தலைமை வகித்தார். மாவட்ட செயற்குழு உறுப்பினர் ஏ.ஸ்ரீதர், இந்திய ஜனநாயக வாலிபர் சங்க மாவட்டச் செயலாளர் ஆ.குமாரவேல், ஜனநாயக மாதர் சங்க மாவட்டத் தலைவர் எஸ்.பாண்டிச்செல்வி, கட்சியின் நகரச் செயலாளர் ஏ.ஆர். பாலசுப்பிரமணியன், ஒன்றியக்குழு உறுப்பினர்கள் பழனிவேல், கனகராஜ், பாண்டியராஜன், நதியா, உதயம் சண்முகம் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.



▶ வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேற்று கனடா நாட்டிற்கு அரசு முறை பயணமாக ஒட்டாவா விமான நிலையத்திற்கு வருகை தந்தபோது, இந்திய தூதுரக அதிகாரிகள் வரவேற்றனர், உடன், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் சமயமூர்த்தி, தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, உள்ளனர்.




▶ 2023-ஆகஸ்ட் 3-ஆம் தேதி முதல் 12-ஆம் தேதி வரை சென்னை மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கத்தில் நடைபெறவுள்ள 7-வது ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பை -2023 போட்டியில் பங்கேற்க சென்னை சர்வதேச விமான நிலையத்திற்கு 30.07.2023 அன்று வருகை தந்த ஜப்பான் நாட்டு அணியை சார்ந்த வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்களுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.



▶ திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற பள்ளிக் குழந்தைகளுக்கான போக்குவரத்து விதிகள் உள்ளிட்ட பல்வேறு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் பயிற்றுநர்களுக்கான 20-வது மாவட்ட அளவிலான பயிற்சி முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் பிரதீப் குமார்,நேற்று கலந்து கொண்டு உரையாற்றினார். அருகில் மாநகர காவல் துணை ஆணையர் செல்வக்குமார், முதன்மை கல்வி அலுவலர் சிவக்குமார், மாவட்ட சமூக நல அலுவலர் நித்யா உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



▶ நாடாளுமன்ற தேர்தல் - 2024 முன்னிட்டு, சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள இந்திய தேர்தல் ஆணைய மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைப்பறைக் கட்டடத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் முதல்நிலை சரிபார்க்கும் பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் கார்மேகம்,நேற்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். உடன் ஆய்வுக்குழு அலுவலர் அபிநயா உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



▶ புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா, பெற்றுக்கொண்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதப்பிரியா, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) செய்யது முகம்மது மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.



▶ மதுரை மாவட்ட ஆட்சியரின் குறைதீர்க்கும் நாளில் பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடம் மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சௌ.சங்கீதா பெற்றுக்கொண்டார்.



▶ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நேற்று கொளத்தூர், ஜவஹர் நகரில் அமைந்துள்ள கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உபகரனங்கள், கல்வி உதவி, பயனாளிகளுக்கு மருத்துவ உ.தவி, திருமண உதவி, மாவு அரவை இயந்திரங்கள், இஸ்திரி பெட்டிகள் போன்ற நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் பொன்முடி, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, துணை மேயர் மகேஷ்குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ரங்கநாதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



▶ சென்னை, புதிய அரசு விருந்தினர் இல்லத்தில், தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் தலைவர் ஹன்ஸ்ராஜ் கங்காராம் அஹிர் தலைமையில், தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் செயலாளர் ராஜீவ் ரஞ்சன், தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் ஆலோசகர் ராஜேஷ் குமார், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழக நிருவாக இயக்குநர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அணில் மேஷ்ராம், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் ரீட்டா ஹரீஷ் தக்கர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் சம்பத், பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சிறப்புச் செயலாளர் ஹனீஷ் சாப்ரா, தமிழ்நாடு சீருடைப்பணியாளர் தேர்வு வாரியத்தின் உறுப்பினர் செயலர் செந்தில் குமாரி, மற்றும் உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# புதுக்கோட்டை ஜெ.ஜெ கல்லூரியின் முதுநிலை முதலாமாண்டு மாணாக்கர்களுக்கான வகுப்புகள் தொடங்க விழா



புதுக்கோட்டை, ஆக.1-

ஜெ.ஜெ.கலை அறிவியல் கல்லூரியின் முதுநிலை முதலாமாண்டு மாணாக்கர்களுக்கான வகுப்புகள் தொடங்கின, அதனை முன்னிட்டு அன்று முற்பகல் துவக்க விழா நடைபெற்றது, கல்லூரி முதல்வர் ஜ.பரசுராமன் சிறப்புரை ஆற்றினார். அவர்தம் உரையில்,

மாணவர்களே, பள்ளியில்பயிலும்பொழுது உங்கள் பெற்றோர்களால் வழிநடத்தப்பட்டீர்கள், கல்லூரியில் இளநிலைப் பயிலும்பொழுது உங்களை நீங்களே வழிநடத்திக் கொண்டீர்கள். ஆனால், முதுநிலை பயிலும் பொழுது நீங்கள் மற்றவர்களை வழிநடத்தும் தகுதி பெற்றவர்கள் ஆகிவிடுகிறீர்கள். எனவே, அப்பொறுப்பினை உணர்ந்து கல்வியறிவைப் பெறுவதோடு, பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும். கல்லூரிக்குக் கல்வியைக் கற்பிக்கும் கடமை மட்டுமல்ல, ‘சமுதாயத்திற்குஏற்புடைய மனிதனை உருவாக்குவதும்’ ஆகும். அதனை முதன்மைப்படுத்தி இக்கல்லூரி செயல்பட்டு வருகிறது.

இன்று இளைஞர்கள் மிகப் பெரிய சவாலுக்குள் சிக்கிக் கொண்டிருக்கிறார்கள். மதுப்பழக்கம் போன்ற போதைகளுக்கு நாட்டில் ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டினர் ஆட்பட்டு இருப்பார்கள். இன்று, அலைபேசி, தொலைக்காட்சி, கணினிப் போன்ற சமூக ஊடகங்களின் திரை போதைக்கு மனித சமுதாயமே ஆட்பட்டு உள்ளது. இதில் இருந்து விடுபடுவது இயலாத ஒன்றாக உள்ளது. முதுநிலை படிக்கும் நீங்கள் நிச்சயம் இதன் போக்கை உணர்ந்து கொள்ள இயலும் என்பதால் சொல்லுகிறேன். இந்தச் சமூகஊடகங்களை உங்கள் அறிவு வளர்ச்சிக்கும் ஆக்கப்பூர்வமான தேவைகளுக்கும் மட்டுமே பயன்படுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

நிகழ்ச்சிக்குமுன்னதாக, கல்லூரியின் தேர்வு நெறியாளர் சுதா வரவேற்க, ஆங்கிலத்துறைத் தலைவர் செல்விநன்றியுரைகூறினார். கூட்டத்தில்உயிர் அறிவியல் துறைகள் சார்பாக ஜீவன், மேலாண்மையியல் துறைகள் சார்பாக ஏ.சத்யரேகா, இயல் அறிவியல்துறைகள்சார்பாக உமா மகேஸ்வரி ஆகியோர் அந்தந்தத் துறைகள் சார்ந்த செய்திகளையும், எதிர்கால வளர்ச்சியில் இதில் பெருகிவரும் வேலைவாய்ப்புகளையும் குறித்து விரிவாக எடுத்துக் கூறினர்.

# புதுக்கோட்டை புத்தகத் திருவிழாவிற்கு படையெடுத்துவரும் மாணவர்கள்



புதுக்கோட்டை, ஆக.1-

புதுக்கோட்டை 6 - ஆவது புத்தக்திருவிழாவில் வழக்கம்போல பள்ளி, கல்லூரி மாணவர்கள் படையெடுத்து வருகின்றனர்.

புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகமும், தமிழ்நாடு அறிவியல் இயக்கமும் இணைந்து 6-ஆவது புதுக்கோட்டை புத்தகத் திருவிழாவை புதுக்கோட்டை நகர்மன்றத்தில் நடத்தி வருகிறது. புத்தகத்திருவிழாவிற்கு வாசகர்களை, பொதுமக்களை ஈர்ப்பதற்காக விழாக்குழுவினர்பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

குறிப்பாக பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் மாணவர்களை அழைத்துவர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அரசுப் மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கு அரசுப் போக்குவரத்துத் துறையின் வாகனத்திலும், தனியார் பள்ளிகளுக்கு சொந்த வாகனத்திலும் மாணவ, மாணவிகளை அழைத்துவர ஏற்பாடு செய்யப்பட்டது.

இதனைத்தொடர்ந்து கடந்த மூன்று நாட்களாக பள்ளி மாணவர்கள் புத்தகத் திருவிழாவை நோக்கி படையெடுத்து வருகின்றனர். மாணவர்களுக்காக ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள கோளரங்கை ஆர்வமுடன் பார்த்து வருகின்றனர். மேலும், மாணவர்களுக்காக ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள அறிவியல் விழிப்புணர்வு நிகழ்ச்சியிலும் பங்கேற்பதோடு தங்களுக்குப் பிடித்தமான புத்தகங்களையும் ஆர்வமுடன் வாங்கிச் செல்கின்றனர்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# மணிப்பூர் வீடியோ வழக்கு சிபிஐ விசாரிக்க பாதிக்கப்பட்ட பெண்கள் எதிர்ப்பு

# சைபர் க்ரைம் குற்றப்பிரிவு விரிவாக்கத்திற்கு ரூ.9 கோடி ஒதுக்கீடு





# மணிப்பூர் மக்களிடம் எம்பிக்கள் கேட்டறிந்ததை நாங்கள் அறிய விரும்புகிறோம்


சென்னை / புதுக்கோட்டை | 01.08.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

01.08.2023 செவ்வாய்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

புருசோத்தம் தாசு தாண்டன் , இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (பி.1882) (இ.1962)



கமலா நேரு , இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (பி.1899) (இ.1936)



முகமது நிசார் , இந்தியத் துடுப்பாளர் (பி.1910) (இ.1963)



கு. சிவமணி , தமிழக வரலாற்றாளர், எழுத்தாளர், சட்டவறிஞர் (பி.1932) (இ.2022)



## இன்றைய நினைவு நாள்

பால கங்காதர திலகர் , இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (பி.1856) (இ.1920)



மு. இராமலிங்கம் , ஈழத்து எழுத்தாளர் (பி.1908) (இ.1974)



ஹர்கிஷன் சிங் சுர்ஜீத் , இந்திய அரசியல்வாதி (பி.1916) (இ.2008)

